## இரண்டாம்நிலை மாணவர்களுக்கான தகவல் குறிப்பு:

இது உங்களுக்கு ஆங்கிலத்தில் கிடைக்கவிருக்கும் இரண்டாம்நிலைப் பாடசாலையில் பதிவுசெய்வதற்கான தொலைபேசி அழைப்பின் ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாகும்:

இது இந்த செப்டெம்பர் மாதத்தில் தரம் (பிள்ளைக்குரியது)க்கு செல்லும் உங்களுடைய பிள்ளைக்காக ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையில் இருந்து வரும் மிகவும் முக்கியமானதொரு செய்தியாகும். *(உங்களுடைய பிள்ளை ஒவ்வொருவருக்கும் ஒரு தொலைபேசி அழைப்பு உங்களுக்குக் கிடைக்கும். அவர்கள் கற்கும் வகுப்புத் தரத்தின் மூலம் அந்த அழைப்புகள் அடையாளம் காணப்படும்.)*

இரண்டாம்நிலைப் பாடசாலைகள் இசைவாக்கப்பட்ட ஒரு மாதிரியுடன் மேம்படுத்தப்பட்ட ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளையுடன் ஆரம்பிக்குமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. TDSB இல், கிட்டத்தட்ட 15 மாணவர்களைக்கொண்ட சிறிய வகுப்புக்கு மாணவர்கள் ஒன்றுவிட்டு ஒரு நாள் பாடசாலைக்கு நேரில் சமூகமளிப்பதுடன், வீட்டில் சுயமாகவும் நேரடியான இணையக் கல்விமுறை உள்ளடங்கலாகவும் கற்றலைத் தொடர்வார்கள்.

அத்துடன், இரண்டாம்நிலைப் பாடசாலைகள் நான்கு தவணைகள் என்ற அட்டவணையில் இயங்கும். பாடசாலை ஆண்டு 44 நாட்களைக் கொண்ட நான்கு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தவணையிலும் மாணவர்கள் இரண்டு பாடநெறிகளைக் கற்பார்கள்.

நேரில் பாடசாலையில் கற்பதற்காக செப்டெம்பர் மாதத்தில் உங்களுடைய பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லையென நீங்கள் தெரிவுசெய்தால், TDSB இன் தொலைதூரக் கற்கைக்கான மெய்நிகர் பாடசாலை ஊடாக, உங்களுடைய பிள்ளைக்கு ஒரு முழுமையான தொலைதூரக் கல்வி முறையொன்று வீட்டில் கிடைக்கப்பெறும். பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட தனிப்பட்ட மாதிரி ஒன்றை வழங்குவதற்குப் போதிய ஆதாரவளங்கள் கிடைக்காததால், தொலைதூரக் கற்கை முறை ஒரு மத்திய மெய்நிகர் பாடசாலை ஊடாக வழங்கப்படும்.

செப்டெம்பர் மாதத்திற்கான வகுப்புப் பட்டியல்களை உருவாக்கும் தேவை உங்களுடைய பாடசாலைக்கு இருக்கின்றது, எனவே உங்களுடைய பிள்ளையை இந்த நேரத்தில் நேரில் கற்பதற்கு (இதன் அர்த்தம் பாடசாலையில் என்பதாகும்) அல்லது தொலைதூரக் கற்கைக்குப் (இதன் அர்த்தம் மெய்நிகர் பாடசாலை என்பதாகும்) பதிவுசெய்யுமாறு உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

1) உங்களுடைய பிள்ளை செப்டெம்பர் மாதத்தில் எவ்வாறு பாடசாலைக்கு மீண்டும் திரும்புவார்:

"எனது பிள்ளை நேரில் சமூகமளிப்பார்" என்பதற்கு 1 ஐ அழுத்துங்கள்

"எனது பிள்ளை தொலைதூரக் கற்கைக்காக மெய்நிகர் பாடசாலைக்குச் சமூகமளிப்பார்" என்பதற்கு 2 ஐ அழுத்துங்கள்

உங்கள் பதிவுக்கு நன்றி. அண்மித்த தகவல்களையும் அடுத்த படிமுறைகள் பற்றிய தகவல்களையும் பெறுவதற்குத்  தயவுசெய்து எங்களுடைய www.tdsb.on.ca என்ற வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.